திருக்கோவையார்

என்னும்

திருச்சிற்றம்பலக்கோவையார்

உ

திருச்சிற்றம்பலம்

திருக்கோவையார்

விநாயக வணக்கம்

எண்ணிறைந்த தில்லை யெழுகோ புரந்திகழக்
கண்ணிறைந்து நின்றருளுங் கற்பகமே — நண்ணியசீர்த்
தேனூறு செஞ்சொற் றிருக்கோவை யென்கின்ற
நானூறும் என்மனத்தே நல்கு

நூற்சிறப்பு

ஆரணங் காணென்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்பர்
ஏரணங் காணென்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.

இவ்விரண்டு செய்யுளும் பிற்காலத்து ஆன்றோர் இயற்றியவை.

திருச்சிற்றம்பலம்

திருக்கோவையார்

க. இயற்கைப்புணர்ச்சி :

1. காட்சி

மதிவாணுதல் வளர்வஞ்சியைக்
கதிர்வேலவன் கண்ணுற்றது

திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னல்கி யனநடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே. (க)

2. ஐயம்

தெரியவரியதோர் தெய்வமென்ன
அருவரைநாடன் ஐயுற்றது

போதோ விசும்போ புனலோ பணிக ளதுபதியோ
யாதோ அறிகுவ தேது மரிதி யமன்விடுத்த
தூதோ அனங்கன் றுணையோ இணையிலி தொல்லைத்தில்லை
மாதோ மடமயி லோவென நின்றவர் வாழ்பதியே (உ)

3. தெளிதல்

அணங்கல்லளென் றயில்வேலவன்
குணங்களை நோக்கிக் குறித்துரைத்தது

பாயும் விடையரன் தில்லையன் னாள்படைக் கண்ணிமைக்கும்
தோயும் நிலத்தடி தூமலர் வாடும் துயரமெய்தி
ஆயும் மனனே யணங்கல்லள் அம்மா முலைசுமந்து
தேயும் மருங்குற் பெரும்பணைத் தோளிச் சிறுநுதலே (௩)

4. நயப்பு

வண்டமர் புரிகுழல் ஒண்டொடி மடந்தையை
நயந்த அண்ணல் வியந்துள்ளியது.

அகல்கின்ற அல்குற் றடமது கொங்கை யவையவநீ
புகல்கின்ற தென்னைநெஞ் சுண்டே யிடையடை யாப்புரங்கள்
இகல்குன்ற வில்லிற்செற் றோன்றில்லை யீசனெம் மானெதிர்ந்த
பகல்குன்றப் பல்லுகுத் தோன்பழ னம்மன்ன பல்வளைக்கே (௪)

5. உட்கோள்

இன்றதிருக்கரத்து மறிமானோக்கி
உள்ளக்கருத்து வள்ளலறிந்தது.

அணியும் அமிழ்துமென் ஆவியும் ஆயவன் தில்லைச்சிந்தா
மணியும்ப ராரறி யாமறை யோனடி வாழ்த்தலரின்
பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழுமின்னும்
பணியும் புரைமருங் குற்பெருந் தோளி படைக்கண்களே. (௫)

6. தெய்வத்தைமகிழ்தல்

அன்னமென்னடை அரிவையைத் தந்த
மன்னிருந்தெய்வத்தை மகிழ்ந்துரைத்தது.

வளைபயில் கீழ்கட னின்றிட மேல்கடல் வானுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல் லோன்கயிலைக்
கிளைவயி னீக்கியிக் கெண்டையங் கண்ணியைக் கொண்டுதந்த
விளைவையல் லால்விய வேனய வேன்றெய்வ மிக்கனவே. (௬)

க. இயற்கைப்புணர்ச்சி

7. புணர்ச்சிதுணிதல்

கோவவைச் சேவவாய்க கொடியிடைப பேதையைத
தெய்வப்புணர்ச்சி செம்மலதுணிந்தது.

வழுவடை யான்பொழில் எட்டுடை யான்புயம எ[illegible]ன்னுள
ஊழுடை யான்புலி யூரன்ன பொன்னிவ வுயர்பொ[illegible]
சூழுடை யாயததை நீக்கும விதித்துணை யாமனனே
யாழுடை யார்மணங் காணணங் காய்வந தகபபட்டதே. (எ)

8. கலவியுரைத்தல்

கோவலவேலவன கொடியிடையோடு
கலவியின்பங் கட்டுரைத்தது.

சொற்பா லமுதிவள யான்சுவை யென்னத துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வந தந்தின்று நானிவ ளாம்பகுதிப
பொற்பா ரறிவார் புலியூர்ப புனிதன் பொதியில்வெற்பில்
கற்பா வியவரை வாயககடி தோட்ட களவகததே (அ)

9. இருவுயிரொத்தல

ஆராவின்பத தனபுமதுார
வாரார்முலையை மகிழ்ந்துரைத்தது.

உணர்ந்தார்க் குணர்வரி யோனதில்லைச சிற்றம் பலத்தொருத்தன
குணந்தான வெளிப்பட்ட கொவ்வைசசெவ வாயிக கொடியிடைதோள
புணர்ந்தாற் புணருந தோறும்பெரும போகமபின் னுமபுதிதாய்
மணந்தாழ் புரிகுழ லாளல்குல போல வளர்கின்றதே (கூ)

10. கிளவிவேட்டல்

அன்னமன்னவள் அவயவங்கண்டு
மென்மொழிகேட்க விருமபுற்றது

அளவியை யாக்கும அறிவரி யோன்றில்லை யமபலம்போல்
வளவிய வான்கொங்கை வாட்டடங் கண்ணுதல் மாமதியின்
பிளவியன் மின்னிடை பேரமைத் தோளிது பெற்றியென்றால்
கிளவியை யென்னோ இனிக்கிள்ளை யார்வாயிற் கேட்கின்றதே. (க0)

11. நலம்புனைந்துரைத்தல்

பொங்கிழையைப் புணர்நலம்புகழ்ந்
தங்கதிர்வேலோன் அயர்வுநீங்கியது

கூம்பலங் கைத்தலத் தன்பரென் பூடுரு கக்குனிக்கும்
பாம்பலங் காரப் பரன்றில்லை யம்பலம் பாடலரின்
தேம்பலஞ் சிற்றிடை யீங்கிவள் தீங்கனி வாய்கமழும்
ஆம்பலம் போதுள வோவளி காணும் அகன்பணையே (௧௧)

12. பிரிவுணர்த்தல்

பணிவளரல்குலைப் பயிர்ப்புறுத்திப்
பிணிமலர்த்தாரோன் பிரிவுணர்த்தியது.

சிந்தா மணிதெண் கடலமிர் தந்தில்லை யானருளால்
வந்தா லிகழப் படுமே மடமான் விழிமயிலே
அந்தா மரையன்ன மேனின்னை யானக னாற்றுவனோ
சிந்தா குலமுற்றென் னோவென்னை வாட்டந் திருத்துவதே ()

13. பருவரலறிதல்

பிரிவுணர்ந்த பெண்கொடிதன்
பருவரலின் பரிசுநினைந்தது

கோங்கிற் பொலியரும் பேய்கொங்கை பங்கன் குறுகலர்ஊர்
தீங்கிற் புகச்செற்ற கொற்றவன் சிற்றம் பலமனையாள்
நீங்கிற் புணர்வரி தென்றோ நெடிதிங்ங னேயிருந்தால்
ஆங்கிற் பழியா மெனவோ அறியேன் அயர்கின்றதே. (௧௩)

14. அருட்குணமுரைத்தல்

கூட்டியதெய்வத் தினனருட்குணம்
வாட்டமின்மை வள்ளலுரைத்தது.

தேவரிற் பெற்றநம் செல்வக் கடிவடி வார்திருவே
யாவரிற் பெற்றினி யார்சிதைப் பாரிமை யோர்தம்முக்கண்
மூவரிற் பெற்றவர் சிற்றம் பலமணி மொய்பொழில்வாய்ப்
பூவரிற் பெற்ற குழலியென் வாடிப் புலம்புவதே. (௧௪)

15. இடமணித்துக்கூறிவற்புறுத்தல்

மடவரலை வற்புறுத்தி
இடமணித்தென்றவன் இயம்பியது

வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை யம்பல வன்மலயத்
திருங்குன்ற வாண ரிளங்கொடி யேயிட ரெய்தலெம்மூர்ப்
பெருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுக மேய்க்குங் கனங்குழையே ()

16. ஆடிடத்துய்த்தல்

வன்புறையின் வற்புறுத்தி
அன்புறுமொழியை அருககன்றது.

தெளிவளர் வான்சிலை செங்கனி வெண்முத்தந் திங்களின்வாய்ந்
தளிவளர் வல்லியன் னாய்முன்னி யாடுபின் யானளவா
ஒளிவளர் தில்லை யொருவன் கயிலை யுகுபெருந்தேன்
துளிவளர் சாரற் கரந்துங்ங னேவந்து தோன்றுவனே (௧௬)

17. அருமையறிதல்

சுற்றமுமிடனும் சூழலுநோக்கி
மற்றவளருமை மன்னனறிந்தது.

புணர்ப்போன் நிலனும் விசும்பும் பொருப்புந்தன் பூங்கழலின்
துணர்ப்போ தெனக்கணி யாக்குந்தொல் லோனில்லைச் சூழ்பொழில்வாய்
இணர்ப்போ தணிகுழ லேழைதன் னீர்மையி னீர்மையென்றால்
புணர்ப்போ கனவோ பிறிதோ அறியேன் புகுந்ததுவே. (௧௭)

18. பாங்கியையறிதல்

கடல்புரையாயத்துக் காதற்றோழியை
மடவரல்காட்ட மன்னனறிந்தது

உயிரொன் றுளமுமொன் றொன்றே சிறப்பிவட் கென்னொடென்னப்
பயில்கின்ற சென்று செவியுற நீள்படைக் கண்கள்விண்வாய்ச்
செயிரொன்று முப்புரஞ் செற்றவன் தில்லைச்சிற் றம்பலத்துப்
பயில்கின்ற கூத்த னருளென லாகும் பணிமொழிக்கே (௧௮)

உ. பாங்கற்கூட்டம்

19. பாங்கனைநினைதல்

எய்துதற்கருமை ஏழையிற்றோன்றப்
பையுளுற்றவன் பாங்கனை நினைந்தது

பூங்கனை யார்புனற் றென்புலி யூர்புரிந் தம்பலத்துள்
ஆங்கெனை யாண்டுகொண் டாடும்பி ரானடித் தாமரைக்கே
பாங்கனை யானன்ன பண்பனைக் கண்டிப் பரிசுரைத்தால்
ஈங்கெனை யார்தடுப் பார்மடப் பாவையை யெய்துதற்கே. (௧)

20. பாங்கன்வினாதல்

கலிகெழுதிரடோள் மெலிவதுகண்ட
இன்னுயிர்ப்பாங்கன் மன்னவனைவினாயது

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியதே. ()

21. உற்றதுரைத்தல்

மற்றவன் வினவ
உற்ற துரைத்தது.

கோம்பிக் கொதுங்கிமே யாமனைக் குஞ்சரங் கோளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கப் பணைமுலைக்கே
தேம்பற் றுடியிடை மான்மட நோக்கிதில் லைச்சிவன்றாள்
ஆம்பொற் றடமலர் சூடுமென் னாற்றலை மாற்றியதே (௩)

22. கழறியுரைத்தல்

வெற்பனைத்தன மெய்ப்பாங்கன்
கற்பனையிற் கழறியது

உளமாம் வகைநம்மை யுய்யவந் தாண்டுசென் றும்பருய்யக்
களமாம் விடமமிர் தாக்கிய தில்லைத்தொல் லோன்கயிலை
வளமாம் பொதும்பரின் வஞ்சித்து நின்றொர்வஞ் சிமருங்குல்
இளமான் விழித்ததென் றோவின்றெம் மண்ணல் இரங்கியதே. (௪)

23. கழற்றெதிர்மறுத்தல

ஆங்குயிரன்ன பாங்கன்கழற
வளந்தருவெற்பன் உளந்தளர்ந்துரைத்தது

*சேணிற் பொலிசெம்பொன் மாளிகைத் தில்லைச்சிற் றம்பலத்து
மாணிக்கக் கூத்தன் வடவான் கயிலை மயிலைமன்னும்
பூணிற பொலிகொங்கை ஆவியை ஓவியப் பொற்கொழுந்தைக்
காணிற் கழறலை கண்டிலை மென்றோட் கரும்பினையே. (௫)*

24. கவன்றுரைத்தல

கோலக்களிற்றண்ணல் குறைநயந்துரைப்பக்
கலக்கஞ்செய்பாங்கன் கவன்றுரைத்தது.

*விலங்கலைக் கால்விண்டு மேன்மேல் விடவிண்ணு மண்ணுமுந்நீர்க்
கலங்கலைச் சென்றவன் றுங்கலங் காய்கமழ் கொன்றைதுன்றும்
அலங்கலைச் சூழ்ந்தசிற் றம்பலத் தானரு ளில்லவர்போல்
துலங்கலைச் சென்றிதென் னேவள்ள லுள்ளந் துயர்கின்றதே.*

25. வலியழிவுரைத்தல்

நிறைபொறைதேற்ற நீதியோடுசாலபு
மறியுறுநோக்கிற்கு வாடினேனென்றது.

*நிலைப்படு சால்பினுக் குந்தள ரேன்சித டம்பித தனென்று
மலைத்தறி வாரிலை யாரையுந் தேற்றுவன் எத்துணையும்
கலைச்சிறு திங்கள் மிலைத்தசிற் றம்பல வன்கயிலை
மலைச்சிறு மான்விழி யாலழி வுற்று மயங்கினனே. (௭)*

26. விதியோடுவெறுத்தல்

கல்விமிகுபாங்கன் கழறவெள்கிச்
செல்வமிகுசிலம்பன் தெரிந்துசெப்பியது.

*நல்வினை யுநயம் தந்தின்று வந்து நடுங்குமின்மேல்
கொல்வினை வல்லன கோங்கரும் பாமென்று பாங்கன்சொல்ல
வில்வினை மேருவில் வைத்தவன் தில்லை தொழாரின்வெள்கித்
தொல்வினை யாற்றுய ரும்மென தாருயிர் துப்புறவே. (௮)*

27. பாங்கனோந்துரைத்தல

இன்னுயிர்பபாங்கனை ஏழையைச்சுட்டி
நின்னதுதனிமை நினைந்திலையென்றது.

ஆலத்தி னாலமிர் தாக்கிய கோன்றில்லை யம்பலம்போல்
கோலத்தி னாள்பொருட் டாக அமிர்தம் குணங்கெடினும
காலத்தி னன்மழை மாறினும் மாறாக் கவிகைநின்பொற்
சீலத்தை நீயும் நினையா தொழிவதென் றீவினையே. (௯)

28. இயலிடங்கேட்டல்

கழுமலெய்திய காதற்றோழன்
செழுமலைநாடனைத் தெரிந்துவினவியது

நின்னுடை நீர்மையும நீயுமிவ் வாறு நினைத்தெருட்டும
என்னுடை நீர்மையி தென்னெனப தேதில்லை யோகொண்முக்கண
மன்னுடை மால்வரை யோமல ரோவிசும் போசிலம்பா
என்னிடம் யாதியல் நின்னையின் னேசெய்த ாங்கொடிக்கே (௧௦)

29. இயலிடங்கூறல்

அழுங்கலெய்திய ஆருயிர்ப்பாங்கற்குச்
செழுங்கதிர்வேலோன் தெரிந்துசெப்பியது.

விழியாற் பிணையாம் விளங்கிய லான்மயி லாமிழற்றும்
மொழியாற் கிளியாம் முதுவா னவர்தம் முடித்தொகைகள்
கழியாக் கழற்றில்லைக் கூத்தன் கயிலைமுத் தம்மலைத்தேன்
கொழியாத திகழும் பொழிற்கெழி லாமெங் குலதெய்வமே.()

30. விற்புறுத்தல்

பெயர்ந்துரைத்த பெருவரைநாடனை
வயங்கெழுபுகழோன் வற்புறுத்தியது.

குயிலைச் சிலம்படிக் கொம்பினைத் தில்லையெங் கூத்தப்பிரான்
கயிலைச் சிலம்பிற்பைம் பூம்புனங் காக்குங் கருங்கட்செவ்வாய்
மயிலைச சிலம்பகண் டியான்போய் வருவன்வண் பூங்கொடிகள்
பயிலச் சிலம்பெதிர் கூய்ப்பண்ணை நண்ணும் பளிக்கறையே.()

31. குறிவழிச்சேறல்

அறைகழலண்ணல் அருளினவழியே
நிறையுடைப்பூங்கண் நினைவொடுசென்றது.

கொடுங்கால் குலவரை யேழேழ் பொழிலெழில் குன்றுமன்றும்
நடுங்கா தவனை நடுங்க நுடங்கு நடுவுடைய
விடங்கா லயிற்கண்ணி மேவுங்கொ லாந்தில்லை யீசன்வெற்பில்
தடங்கா தருபெரு வான்பொழி னீழலந் தண்புனத்தே.(௩௧)

32. குறிவழிக்காண்டல்

குளிர்வரைநாடன் குறிவழிச்சென்று
தளிர்புரைமெல்லடித் தையலைக்கண்டது.

வடிக்கண் இவைவஞ்சி யஞ்சு மிடையிது வாய்பவளம்
துடிக்கின்ற வாவெற்பன் சொற்பரி சேயான் தொடர்ந்துவிடா
அடிச்சந்த மாமல ரண்ணல்விண் ணோர்வணங் கம்பலம்போல்
படிச்சந் தமுமிது வேயிவ ளேயப் பணிமொழியே. (௩௨)

33. தலைவனைவியந்துரைத்தல்

நயந்தவுருவும் நலனுங்கண்டு
வியந்தவனையே மிகுத்துரைத்தது.

குவளைக் களத்தம் பலவன் குரைகழல் போற்கமலத்
தவளைப் பயங்கர மாகநின் றுண்ட அவயவத்தின்
இவளைக்கண் டிங்குநின் றங்குவந் தத்துணை யும்பகர்ந்த
கவளக் களிற்றண்ண லேதிண்ணி யானிக் கடலிடத்தே. (௩௩)

34. கண்டமைகூறல்

பிடிமிசைவைத்துப் பேதையதுநிலைமை
அடுதிறலண்ணற் கறியவுரைத்தது.

பணந்தாழ் அரவரைச் சிற்றம் பலவர்பைம் பொற்கயிலைப்
புணர்ந்தாங் ககன்ற பொருகரி யுன்னிப் புனத்தயலே
மணந்தாழ் பொழிற்கண் வடிக்கண் பரப்பி மடப்பிடிவாய்
நிணந்தாழ் சுடரிலை வேலகண் டேனென்று நின்றதுவே.(௩௪)

35. செவ்விசெபபல்

அற்புதன்கைவல மற்போலிசிலம்பற்
கவ்வுருக்கண்டவன் செவவிசெபபியது.

கயலுள வேகம லத்தலர் மீது கனிபவளத
தயலுள வேமுத்த மொத்த நிரையர னம்பலத்தின்
இயலுள வேயிணைச் செப்புவெற் பாநின தீங்கொடிமேற்
புயலுள வேமலர் சூழ்ந்திருள் தூஙகிப் புரள்வனவே. (கஎ)

36. அவ்விடத்தேகல்

அரிவையதுநிலைமை அறிந்தவனுரைபப
எரிகதிர்வேலோன் ஏகியது.

எயிற்குல மூன்றிருந தீயெய்த எய்தவன் தில்லையொததுக
குயிற்குலங கொண்டுதொண் டைககனி வாய்ககுளிர முத்தநிரைத
தயிற்குல வேல்கம லத்திற் கிடததி அனநடக்கும
மயிற்குலங் கண்டதுண் டேலது வென்னுடை மன்னுயிரே. ()

37. மினனிடைமெலிதல

மன்னவன நினைந்து
மின்னிடை மெலிந்தது

ஆவியன் னுய்கவ லேலக லேமென் றளிததொளிதத
ஆவியன் னார்மிக் கவாவின ராய்க்கெழு மற்கழிவுற
றாவியன் னாமன்னி யாடிடஞ் சோவர்கொல அமபலததெம
ஆவியன் னன்பயி லுங்கயி லாயத தருவரையே. (கஅ)

38. பொழில்கண்டுமகிழ்தல்

மணங்கமழ்பொழிலின் வடிவுகண
டணங்கெனநினைந் தயர்வுநீங்கியது.

காமபிணை யாற்களி மாமயி லாற்கதிர் மாமணியால்
வாமபிணை யால்வல்லி யொலகுத லான்மன்னு மமபலவன்
பாம்பிணை யாக்குழை கொண்டோன் கயிலைப் பயில்புனமு
தேம்பிணை வார்குழ லாளெனத தோன்றுமென் சிந்தனைக்கே.

39. உயிரெனவியத்தல்

வெறியுறுபொழிலின் வியன்போதும்பரின்,
நெறியுறுகுழலி நிலைமைகண்டது.

நேயத்த தாயென்னை யென்னைப் புணர்ந்துநெஞ் சநெகப்போய்
ஆயத்த தாயமிழ் தாயணங் காயரன் அம்பலம்போல்
தேயத்த தாயென்றன் சிந்தைய தாய்த்தெரி யிற்பெரிதும்
மாயத்த தாகி யிதோவந்து நின்றதென் மன்னுயிரே (உக)

40. தளர்வகன்றுரைத்தல்

பனிமதிநுதலியைப் பைம்பொழிலிடைத்
தனிநிலைகண்டு தளர்வகன்றுரைத்தது

தாதிவர் போதுகொய் யார்தைய லாரங்கை கூப்பநின்று
சோதி வரிப்பந் தடியார் சுனைப்புன லாடல்செய்யார்
போதிவர் கற்பக நாடுபுல் லென்னத்தம் பொன்னடிப்பாய்
யாதிவர் மாதவம் அம்பலத் தான்மலை யெய்துதற்கே (உஉ)

41. மொழிபெறவருந்தல்

கூடற் கரிதென
வாடி யுரைத்தது

காவிநின் றேர்தரு கண்டர்வண் டில்லைக்கண் ணார்கமலத்
தேவியன் றேயையஞ் சென்றதன் றேயறி யச்சிறிது
மாவியன் றன்னமென் னோக்கிநின் வாய்திற வாவிடினென்
ஆவியன் றேயமிழ் தேயணங் கேயின் றழிகின்றதே. (உங)

42. நாணிக்கண்புதைத்தல்

ஆயிடைத்தனிநின் றுற்றுதழீந்து
வேயுடைத்தோளியோர் மென்கொடிமறைந்தது.

அகலிடந் தாவிய வானோன் அறிந்திறைஞ் சம்பலத்தின்
இகலிடந் தாவிடை யீசற் றொழாரினின் னற்கிடமாய்
உகலிடந் தான்சென் றெனதுயிர் நையா வகையொதுங்கப்
புகலிடந் தாபொழில் வாயெழில் வாய்தரு பூங்கொடியே. (உச)

43. கண்புதைக்கவருந்தல்

வேறறருங்கண்ணிணை மிளிர்வனவன்றுநின்
கூறறருமேனியே கூற்றெனகக்கென்றது.

தாழச்செய் தார்முடி தன்னடிக் கீழ்வைத தவரைவிண்ணோ
சூழச்செய் தானம பலங்கை தொழாரினுள் ளந்துளங்கப
போழச்செய் யாமலவை வேற்கண் புதைத்துப்பொன் னேயெனனேநீ
வாழச்செய் தாய்சுற் றுமுற்றும் புதைநின்னை வாணுதலே (உரு)

44. நாண்விடவருந்தல்

ஆங்ஙனங்கண டாற்றுளாகி
நீங்கினநாணொடு நேரிழைநின்றது.

குருநாண் மலர்ப்பொழில் சூழ்தில்லைக் கூத்தனை யேத்தலாபோல
வருநாள் பிறவற்க வாழிய ரோமற்றென் கண்மணிபோன்
றொருநாள் பிரியா துயிரிற் பழகி யுடன்வளாநத
அருநா ணளிய அழல்சேர் மெழுகொத் தழிகின்றதே. (உசு)

45. மருங்கணைதல்

ஒளிதிகழ்வார்குழல் அளிகுலம்விலக்கிக்
கருங்களிற்றண்ணல் மருங்கணைந்தது.

கோலத் தனிக்கொம்ப ருமபர்புக் கஃதே குறைப்பவர்தம்
சீலத தனகொங்கை தேற்றகி லேனுசிவன் தில்லையன்னாள்
நூலொத்த நேரிடை நொய்ம்மையெண் ணாது நுண் டேனசையால்
சாலத தகாதுகண் டீர்வண்டு காள்கொண்டை சார்வதுவே. ()

46. இன்றியமையாமைகூறல்

வென்றிவேலவன் மெல்லியறனக்
கின்றியமையாமை யெடுத்துரைத்தது.

நீங்கரும் பொற்கழற் சிற்றம் பலவர் நெடுவிசும்பும்
வாங்கிருந் தெண்கடல் வையமும் எய்தினும் யான்மறவேன்
தீங்கரும் பும்மமிழ் துஞ்செழுந் தேனும் பொதிந்துசெப்பும்
கோங்கரும் புந்தொலைத் தென்னையும் ஆட்கொண்ட கொங்கைகளே ()

47. ஆயத்துயுத்தல்

தேங்கமழ் சிலம்பன்
பாங்கிற கூட்டியது.

சூளா மணியுமபர்க் காயவன் சூழ்பொழிற் றில்லையன்னாய்க
காளா யொழிந்தென் னுருயி ராரமிழ் தேயணங்கே
தோளா மணியே பிணையே பலசொல்லி யென்னை துனனும
நாளாா மலர்பபொழில் வாயெழி லாயம நணுகுகவே. (உசு)

48. நினறுவருந்தல்

பாங்கிற்கூட்டிப பதிவயிறபெயர்வோன்
நீங்கறகருமை நின்றுநினைந்தது.

பொய்யுடை யார்க்கரன் போலக லும்மகன் றூற்புணரின்
மெய்யுடை யார்க்கவன் அம்பலம் போல மிகநணுகும்
மையுடை வாட்கண் மணியுடைப பூண்முலை வாணுதல்வான்
பையுடை வாளர வத்தல்குல் காக்கும்பைம் பூம்புனமே. (நூ௦)

ந. இடந்தலைப்பாடு :

49. பொழிலிடைச்சேறல்

ஐயரிககண்ணியை ஆடிடத்தேசேன்
றெய்துவனெனநினைந் தேந்தல்சென்றது.

என்னறி வால்வந்த தன்றிது முன்னுமின் னும்முயன்றால்
மன்னெறி தநத திருநதன்று தெய்வம வருநதனெஞ்சே
மின்னெறி செஞ்சடைக் கூத்தப பிரான்வியன் தில்லைமுந்நீர்
பொன்னெறி வார்துறை வாய்சசென்று மின்றோய பொழிலிடத்தே ()

ச. மதியுடம்படுத்தல் :

50. பாங்கியிடைச்சேறல்

கரந்துறைகிளவியிற காதற்றோழியை
இரந்துகுறையுறுவலென் றேந்தல்சென்றது.

எளிதன றினிக்கனி வாய்வல்லி புல்லல் எழின்மதிக்கீற்
றொளிசென்ற செஞ்சடைக் கூத்தப்பி ரானையுன் னாரினென்கண்
தெளிசென்ற வேற்கண் வருவித்த செல்லலெல் லாந்தெளிவித்
தளிசென்ற பூங்குழற் றோழிக்கு வாழி யறிவிபபனே. (க)

51. குறையுறத்துணிதல்

ஓரிடத்தவரை ஒருங்குகண்டுதன்
பேரிடர்பெருந்தகை பேசத்துணிந்தது.

குவளைக் கருங்கட் கொடியே ரிடையிக் கொடிகடைக்கண்
உவளைத் தனதுயி ரென்றது தன்னோ டுவமையில்லாத்
தவளத்தன் பாலவைத்த சிற்றம் பலத்தான் அருளிலர்போல்
துவளத் தலைவந்த இன்னலின் னேயினிச் சொல்லுவனே. (உ)

52. வேழம்வினாதல்

ஏழையரிருவரும் இருந்தசெவ்வியுள்
வேழம்வினாவும் வெற்பன்சென்றது

இருங்களி யாயின் றியானிறு மாப்பவின் பம்பணிவோர்
மருங்களி யாவன லாடவல் லோன்றில்லை யான்மலையீங்
கொருங்களி யார்ப்ப வுமிழ்மும் மதத்திரு கோட்டொருநீள்
கருங்களி யாமத யானையுண் டோவரக் கண்டதுவே. (௩)

53. கலைமான்வினாதல்

சிலம்பன் அண்ணல்
கலைமான் வினாயது.

கருங்கண் ணனையறி யாமைநின் றோன்றில்லைக் கார்ப்பொழில்வாய்
வருங்கண் ணனையவண் டாடும வளரின வல்லியன்னீர்
இருங்கண் ணனைய கணைபொரு புண்புண ரிப்புனத்தின்
மருங்கண் ணனையதுண் டோவந்த தீங்கொரு வான்கலையே. (௪)

54. வழிவினாதல்

கலைமான்வினாய கருத்துவேறறிய
மலைமானண்ணல் வழிவினாயது.

சிலம்பணி கொண்டசெஞ் சீறடி பங்கன்றன் சீரடியார்
குலம்பணி கொள்ள எனைக்கொடுத் தோன்கொண்டு தானணியும்
கலம்பணி கொண்டிடம் அம்பலங் கொண்டவன் கார்க்கயிலைச்
சிலம்பணி கொண்டநுஞ் சீறூர்க் குரைமின்கள் சென்னெறியே. (௫)

55. பதிவினாதல்

பதியொடுபெயர்வினாய் மொழிபலமொழிந்து
மதியுடம்படுக்க மன்னன்வலிந்தது

ஒருங்கட லூழிவெயி லொற்றைக் கணைகொள்சிற் றம்பலவன்
கருங்கட லூன்றுகு நால்வாய்க் கரியுரித் தோன்கயிலை
இருங்கட லூடும் பொழிலெழிற் கொம்பரன் னீர்களின்னே
வருங்கடம லூர்பகாந தாற்பழி யோவிங்கு வாழ்பவர்க்கே (௬)

56. பெயர்வினாதல்

பேரமைத் தோளியர்
பேர்வி னயது.

தாரென்ன வோங்குநு சடைமுடி மேற்றனித் திங்கள்வைத்த
காரென்ன ஆருங் கறைமிடற் றம்பல வன்கயிலை
ஊரென்ன என்னவும் வாய்திற வீரொழி வீர்பழியேல்
பேரென்ன வோவுரை யீர்விரை யீர்ங்குழற் பேதையரே. (௭)

57. மொழிபெறாதுகூறல்

தேமொழியவர் வாய்மொழிபெறாது
மட்டவிழ்தாரோன் கட்டுரைத்தது.

இரத முடைய நடமாட் டுடையவர் எம்முடையர்
வரத முடைய அணிதில்லை யன்னவர் இப்புனத்தார்
விரத முடையர் விருந்தொடு பேச்சின்மை மீட்டதன்றேல்
சரத முடையர் மணிவாய் திறக்கிற் சலக்கென்பவே. (௮)

58. கருத்தறிவித்தல்

உரைத்த துரையாது
கருத்தறி வித்தது.

வின்னிற வாணுதல் வேனிறக கண்மெல் லியலைமல்லல்
தன்னிற மொன்றி லிருத்திநின் றோன்றன தம்பலம்போல்
மின்னிற நுண்ணிடைப் பேரெழில் வெண்ணகைப் பைந்தொடியீர்
பொன்னிற அல்குலுக் காமோ மணிநிறப பூந்தழையே. (௯)

59. இடைவினாதல்

வழிபதி பிறவினும்
மொழிபல மொழிந்தது.

கலைக்கீ ழகலல்குற் பாரமு தாரகண் ணார்ந்திலங்கு
முலைக்கீழ்ச் சிறிதின்றி நிற்றன்முற் றீதன் றிலங்கையர்கோன்
மலைக்கீழ் விழச்செற்ற சிற்றம் பலவர்வண் பூங்கயிலைச்
சிலைக்கீழ்க் கணையன்ன கண்ணீர் எதுநுங்கள் சிற்றிடையே. ()

ரு. இருவருமுள்வழி அவன்வரவுணர்தல் :

60. ஐயுறுதல்

அடற்கதிர்வேலோன் தொடர்ச்சிநோக்கித்
தையற்பாங்கி ஐயமுற்றது.

பல்லிலன் ஆகப் பகலைவென் றோன்றில்லை பாடலர்போல்
எல்லிலன் நாகத்தொ டேனம் வினவிவன் யாவன்கொலாம
வில்லிலன் நாகத தழைகையில் வேட்டைகொண் டாடடமெய்யோர்
சொல்லிலன் ஆகற்றுஞ் வாகட வானிச் சுனைபபுனமே. (க)

61. அறிவுநாடல்

வெற்பன்வினைய சொற்பதநோக்கி
நெறிகுழற்பாங்கி அறிவுநாடியது.

ஆழமன் னேவுடைத் திவ்வையர் வார்த்தை அனங்கனைந்து
வீழமுன் னேக்கிய அம்பலத தான்வெற்பி னிப்புனத்தே
வேழமுன் னுய்க்கலை யாய்ப்பிற வாய்ப்பின்னு மென்றழையாய்
மாழைமென் னேக்கி யிடையாய்க் கழிந்தது வந்தவன்றே. (உ)

சு. முன்னுறவுணர்தல் :

62. வாட்டம்வினாதல்

மின்னிடைமடந்தை தன்னியனோக்கி
வீங்குமென்முலைப் பாங்கிபகர்ந்தது.

திருத்தம் பயின்றவன் சிற்றம் பலத்துநெற் றித்தனிக்கண்
ஒருத்தன் பயிலுங் கயிலை மலையின் உயர்குடுமித்
திருத்தம் பயிலுஞ் சுனைகுடைந் தாடிச சிலம்பெதிர்கூய்
வருத்தம் பயின்றுகொல் லோவல்லி மெல்லியல் வாடியதே. (க)

எ. குறையுறவுணர்தல் :

63. குறையுற்றுநிற்றல

கறையுற்ற வேலவன்
குறையுற்றது

மடுக்கோ கடலின் விடுதிமில் அன்றி மறிதிரைமீன்,
படுக்கோ பணிலம் பலகுளிக் கோபரன் தில்லைமுன்றில்
கொடுக்கோ வளைமற்று நும்மையர்க் காய்குற் றேவல்செய்கோ
தொடுக்கோ பணியீர் அணியீர் மலர்நுஞ் சுரிகுழற்கே. (க)

64. அவன்குறிப்பறிதல்

பொற்றொடித்தோளிதன் சிற்றிடைப்பாங்கி
வெறிபூஞ்சிலம்பன் குறிப்பறிந்தது.

அளியமன் னும்மொன் றுடைத்தண்ண லெண்ணரன் தில்லையன்னாள்
கிளியைமன் னுங்கடி யச்செல்ல நிற்பிற் கிளரளகத்
தளியமர்ந் தேறின் வறிதே யிருப்பிற் பளிங்கடுத்த
ஒளியமர்ந் தாங்கொன்று போன்றொன்று தோன்றும் ஒளிமுகத்தே. (உ)

65. அவள்குறிப்பறிதல்

ஆங்கவள் குறிப்புப்
பாங்கி பகர்ந்தது.

பிழைகொண் டொருவிக் கெடாதன்பு செய்யிற் பிறவியென்னும்
முழைகொண் டொருவன்செல் லாமைநின் றம்பலத் தாடுமுன்னோன்
உழைகொண் டொருங்கிரு நோக்கம் பயின்றவெம் மொண்ணுதன்மாந்
தழைகொண் டொருவனென் னாமுன்ன முள்ளந் தழைத்திடுமே. (ங)

66. இருவர்நினைவுமோருவழியுணர்தல

அன்புறுநோக் காங்கறிந்
தின்புறுதோழி எண்ணியது.

பெய்யே யிவற்கில்லை வேட்டையின் மேன்மனம் மீட்டிவளும்
பொய்யே புனத்தினை காப்ப திறைபுலி யூரனையாள்
மையேர் குவளைக்கண் வண்டினம் வாழுஞ்செந் தாமரைவாய்
எய்யே மெனினுங் குடைந்தின்பத் தேனுண் டெழிறருமே. (ச)

அ. நாணநாட்டம் :

67. பிறைதொழுகென்றல

பிறைதொழுகென்று பேதைமாதரை
நறுநுதற்பாங்கி நாணநாட்டியது.

மைவார் கருங்கண்ணி செங்கரங் கூப்பு மறந்துமற்றப்
பொய்வா னவரிற் புகாதிதன் பொற்கழற் கேயடியேன்
உய்வான் புகவொளிர் தில்லைநின் றோன்சடை மேலதொத்துச்
செவ்வா னடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறுபிறைக்கே. (க)

68. வேறுபடுத்துக்கூறல்

வேய்வளைத்தோளியை வேறுபாடுகண்
டாய்வளைத்தோழி அணங்கென்றது.

அக்கின்ற வாமணி சேர்கண்டன் அம்பல வன்மலயத்
திக்குன்ற வாணர் கொழுந்திச் செழுந்தண் புனமுடையாள்
அக்குன்ற ஆறமர்ந் தாடச்சென் றாளங்கம் அவ்வவையே
ஒக்கின்ற வாறணங் கேயிணங் காகும் உனக்கவளே. (உ)

69. சுனையாடல்கூறிநகைத்தல்

மாணநாட்டிய வார்குழற்பேதையை
நாணநாட்டி நகைசெய்தது.

செந்நிற மேனிவெண் ணீறணி வோன்றில்லை யம்பலம்போல்
அந்நிற மேனிநின் கொங்கையி லங்கழி குங்குமம்
மைந்நிற வார்குழன் மாலையும் தாதும் வளாய்மதனுஞ்சேர்
இந்நிற மும்பெறின் யானுங் குடைவன் இருஞ்சுனையே. (ங)

70. புணர்ச்சியுரைத்தல

மணக்குறி நோக்கிப
புணர்ச்சி யுரைத்தது.

பருங்கண் கவர்கொலை வேழப் படையோன் படப்படர்தீத்
தருங்கண் ணுதற்றில்லை யம்பலத் தோன்றட மால்வரைவாய்க்
கருங்கண் சிவப்பக் கனிவாய் விளர்ப்பக்கண் ணாரளிபின்
வருங்கண் மலைமலர் சூட்டவற் றோமற்றவ் வான்சுனையே. (ச)

71. மதியுடம்படுதல்

அயிலவேற்கண்ணியோ டாடவன்றனக்குயிரொன்றென
மயிலியற்றோழி மதியுடம்பட்டது.

காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்து ளோருயிர் கண்டனம் யாமின்றி யாவையுமாம்
ஏகத் தொருவ னிருமபொழி லம்பல வன்மலையில்
தோகைக்கு தோன்றற்கும் ஒன்றாய வருமினபத் துனபங்களே (கு)

கூ. நடுங்கநாட்டம் :

72.

நுடங்கிடைப் பாங்கி
நடுங்க நாடியது.

ஆவா இருவர் அறியா அடிதில்லை யம்பலத்து
மூவா யிரவர் வணங்கநின் றோனையுன் னாரின்முன்னித்
தீவா யுழுவை கிழித்தத தோசிறி தேபிழைபபித்
தாவா மணிவேல பணிகொண்ட வாறின்றொ ராண்டகையே. (க)

கூ0. மடற்றிறம்

73. ஆற்றுதுரைத்தல்

மல்லற்றிரள் வரைத்தோளவன்
சொல்லாற்று சொல்லியது.

பொருளா எனைப்புகுந் தாண்டு புரந்தரன் மாலயன்பால்
இருளா யிருக்கும் ஒளிநின்ற சிற்றம் பலமெனலாம்
சுருளார் கருங்குழல் வெண்ணகைச் செவ்வாய்த் துடியிடையீர்
அருளா தொழியின் ஒழியா தழியுமென் ஆருயிரே. (க)

74. உலகினமேல்வைத்துரைத்தல்

புலவேலண்ணல் புனைமடலேற்
றுலகின்மேல்வைத் துய்த்துரைத்தது.

காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து
வீசின போதுள்ள மீனிழந் தார்வியன் றென்புலியூர்
ஈசன சாந்தும் எருக்கும் அணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்சின மாவென ஏறுவர் சீறூர்ப் பனைமடலே. (உ)

75. தனறுணிபுரைத்தல

மானவேலவன் மடன்மாமிசை
யானுமேறுவன் என்னவுரைத்தது.

விண்ணை மடங்க விரிநீர் பரந்துவெற் புககரப்ப
மண்ணை மடஙக வருமொரு காலததீ மன்னிநிற்கும்
அண்ணல் மடஙக லதளம பல்வன் அருளிலர்போல்
பெண்ணை மடன்மிசை யான்வரப் பண்ணிற்றொர் பெண்கொடியே. ()

76. மடலேறும்வகையுரைத்தல

அடல்வேலவன் அழிவுற்று
மடலேறும் வகையுரைத்தது.

கழிகின்ற என்னையும் நின்றநின் கார்மயில் தன்னையும்யான்
கிழியொன்ற நாடி யெழுதிககைக கொண்டென் பிறவிகெட்டின்
றழிகின்ற தாக்கிய தாள்ம் பலவன் கயிலையந்தேன்
பொழிகின்ற சாரனுஞ சீறூர்த் தெருவிடைப் போதுவனே.(௪)

77. அருளாலரிதெனவிலக்கல்

அடல்வேலண்ணல் அருளுடைமையின்
மடலேற்றுனக கரிதென்றது.

நடனாம் வணஙகுந்தொல் லோனெல்லை நான்முகன் மாலறியாக்
கடனாம் உருவத் தரன்றில்லை மல்லற்சண் ணார்ந்தபெண்ணை
உடனாம் பெடையொடொண் சேவலும் முட்டையுங் கட்டழித்து
மடனாம் புனைதரின் யார்கண்ண தோமன்ன இன்னருளே (௫)

78. மொழிநடையெழுதலரிதெனவிலக்கல்

அவயவமரிதின் அண்ணறீட்டினும்
இவையிவைதீட்டல் இயலாதென்றது.

அடிச்சந்த மால்கண் டிலாதன காட்டிவந் தாண்டுகொண்டென்
முடிச்சந்த மாமல ராக்குமுன் னோன்புலி யூர்புரையும்
கடிச்சநத யாழ்கற்ற மென்மொழிக் கன்னி யனநடைக்குப
படிச்சந்த மாக்கும் படமுள வோநும பரிசகத்தே. (௬)

79. அவயவமேழுதலரிதேனவிலக்கல்

அவயவ மானவை
இவையிவை யென்றது.

யாழு மெழுதி யெழின்முத் தெழுதி யிருளின்மென்பூச
சூழு மெழுதியொர் தொண்டையுந தீட்டியென தொலபிறவி
ஏழு மெழுதா வகைசிதைத் தோன்புலி யூரிளமாம.
போழு மெழுதிறறொர் கொமபருண் டேற்கொணடு போதுகவே (எ)

80. உடம்படாதுவிலக்கல்

அடுபடையண்ணல் அழிதுயரொழிகென
மடநடைத்தோழி மடல்விலக்கியது.

ஊர்வா யொழிவா யுயர்பெண்ணைத் திண்மடல் நின்குறிப்புச்
சீர்வாய் சிலம்ப திருத்த இருந்திலம் ஈசர்தில்லைக்
கார்வாய் குழலிக்குன் னுதர வோதிக்கற் பித்துக்கண்டால்
ஆர்வாய் தரினறி வார்பின்னைச் செய்க அறிந்தனவே. (அ)

81. உடம்பட்டுவிலக்கல்

அரவருநுண்ணிடைக குரவருகூந்தலேன்
உள்ளககருத்து விள்ளாளென்றது.

பைநநா ணரவன் படுகடல் வாய்பபடு நஞ்சமுதாம்
மைந்நாண் மணிகண்டன் மன்னும் புலியூர் மணநதபொன்னிம்
மொய்ந்நாண் முதுதிரை வாயா னழுநதினும என்னின்முன்னும
இந்நா ளிதுமது வார்குழ் லாட்கென்கண் இனனருளே. (கூ)

கக. குறைநயப்புக்கூறல்:

82. குறிப்பறிதல்

நறைவளர்கோதையைக் குறைநயப்பித்தற்
குள்ளறிகுற்ற வெள்ளிழையுரைத்தது.

நாதேய் மலர்க்குஞ்சி யஞசிறை வண்டுதண் டேன்பருகித்
தேதே யெனுந்தில்லை யோன்சே யெனசசின வேலொருவர்
மாதே புனத்திடை வாளா வருவாவந் தியாதுஞ்சொல்லார்
யாதே செயத்தக் கதுமது வார்குழல் ஏநதிழையே. (க)

83. மெனமொழியாற்கூறல்

ஒளிருறுவேலவன் தளர்வுறுகின்றமை
இனமொழியிவட்கு மென்மொழிமொழிந்தது.

வரிசேர் தடங்கண்ணி மம்மர்கைம் மிக்கென்ன மாயங்கொலோ
எரிசேர் தளிரன்ன மேனியன் ஈர்ந்தழை யன்புலியூர்ப்
புரிசேர் சடையோன் புதல்வன்கொல் பூங்கணை வேள்கொலென்னத்
தெரியேம் உரையான் பிரியா னொருவனித் தேம்புனமே. (உ)

84. விரவிக்கூறல்

வன்மொழியின்மன மெலிவதஞ்சி
மென்மொழிவிரவி மிகுத்ததுரைத்தது.

நீகண்ட னையெனின் வாழலை நேரிழை யம்பலத்தான்
சேய்கண் டனையன்சென் றாங்கோ ரலவன்றன் சீர்ப்பெடையின்
வாய்வண் டனையதொரா நாவற் கனிநனி நல்கக்கண்டு
பேய்கண் டனையதொன் றாகிநின் றானப் பெருந்தகையே. (ங)

85. அறியாளபோறல்

அறியாள் போன்று
குறியாள் கூறியது.

சங்கந் தருமுத்தி யாம்பெற வான்கழி தான்கெழீஇப்
பொங்கும் புனற்கங்கை தாங்கிப் பொலிகலிப் பாறுலவு
துங்க மலிதலை யேந்தலி னேந்திழை தொல்லைப்பன்மா
வங்க மலிகலி நீர்தில்லை வானவ னேர்வருமே. (ச)

86. வஞ்சித்துரைத்தல்

நெஞ்சநெகிழ்வகை வஞ்சித்திவையிவை
செஞ்சடையோன்புகழ் வஞ்சிக்குரைத்தது.

புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடெந் தாயென் றிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு
கரங்கடந் தானொன்று காட்டமற் றாங்கது காட்டிடென்று
வரங்கிடந் தான்றில்லை யம்பல முன்றிலம் மாயவனே (ரு)

87. புலந்துகூறல்

திருந்தியசொல்லிற் செவ்விபெறாது
வருந்தியசொல்லின் வகுத்துரைத்தது.

உள்ளப் படுவன வுள்ளி யுரைத்தக் கவர்க்குரைத்து
மெள்ளப் படிறு துணிதுணி யேலிது வேண்டுவல்யான்
கள்ளப் படிறர்க் கருளா அரன்றில்லை காணலர்போல்
கொள்ளப் படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே. (சு)

88. வனமொழியாற்கூறல்

கடலுலகறியக் கமழலந்துறைவன
மடலேறும்மென வனமொழிமொழிந்தது.

மேவியந் தோலுடுக் குந்தில்லை யான்பொடி மெய்யிற்கையில்
ஓவியந் தோன்றுங் கிழிநின் னெழிலென் றுரையுளதால்
தூவியந் தோகையன் னாயென்ன பாவஞ்சொல் லாடல்செய்யான்
பாவியந் தோபனை மாமட லேறக்கொல் பாவித்ததே. (எ)

89. மனத்தொடுநேர்தல்

அடல்வேலவன் ஆற்றானெனக்
கடலமிழ்தன்னவள் காணலுற்றது.

பொன்னார் சடையோன் புலியூர் புகழா ரெனப்புரிநோய்
என்னா லறிவில்லை யானென் றுரைக்கிலன் வந்தயலார்
சொன்னா ரெனுமித் துரிசுதுன் னாமைத் துணைமனனே
என்னாந் துயாவல்லை யேற்சொல்லு நீமை யினியவர்க்கே. (அ)

கஉ. சேட்படை

90. தழைகொண்டுசேறல்

கொய்ம்மலர்க்குழலி குறைநயந்தபின்
கையுறையோடு காளைசென்றது.

தேமென் கிளவிதன் பங்கத் திறையுறை தில்லையன்னீர்
பூமென் றழையுமம் போதுங்கொள் ளீர்தமி யேன்புலம்ப
ஆமென் றருங்கொடும் பாடுகள் செய்து நுங் கண்மலராம்
காமன் கணைகொண் டலைகொள்ள வோமுற்றக் கற்றதுவே. (க)

91. சந்தனத்தழைதகாதென்றுமறுத்தல்

பிறைநுதற்பேதையைக் குறைநயப்பித்தபின்
வாட்படையண்ணலைச் சேட்படுத்தது.

ஆரத் தழையராப் பூண்டம் பலத்தன லாடியன்பர்க்
காரத் தழையன் பருளிநின் றேன்சென்ற மாமலயத்
தாரத் தழையண்ணல் தந்தால் இவையவள் அல்குற்கண்டால்
ஆரத் தழைகொடு வந்தா ரெனவரும் ஐயுறவே. (௨)

92. நிலத்தின்மைகூறிமறுத்தல்

கோங்கலர்தாரோய் கொணர்ந்தகோய்த்தழை
எங்குலத்தார்க்கு ஏலாதென்றது.

முன்றகர்த் தெல்லா இமையோரையும்பின்னைத் தக்கன்முத்தீச்
சென்றகத் தில்லா வகைசிதைத் தோன்றிருந் தம்பலவன்
குன்றகத் தில்லாத் தழையண்ணல் தந்தாற் கொடிச்சியருக்
கின்றகத் தில்லாப் பழிவந்து மூடுமென் றெள்குதுமே. (௩)

93. நினைவறிவுகூறிமறுத்தல்

மைத்தழைக்கண்ணி மனமறிந்தல்லது
கோய்த்தழைதந்தாற் கொள்ளேமென்றது.

யாழார் மொழிமங்கை பங்கத் திறைவன் எறிதிரைநீர்
ஏழா யெழுபொழி லாயிருந் தோனின்ற தில்லையன்ன
சூழார் குழலெழிற் றொண்டைச்செவ் வாய்நவ்வி சொல்லறிந்தால்
தாழா தெதிர்வந்து கோடுஞ் சிலம்ப தருந்தழையே. (௪)

94. படைத்துமொழியான்மறுத்தல்

அருந்தழைமேன்மேற் பெருந்தகைகொணரப்
படைத்துமொழிகிளவியின் தடுத்தவண்மொழிந்தது.

எழில்வா யிளவஞ்சி யும்விரும் பும்மற் றிறைகுறையுண்
டழல்வா யவிரொளி யம்பலத் தாடுமஞ் சோதியந்தீங்
குழல்வாய் மொழிமங்கை பங்கனைக் குற்றாலத்துக் கோலப்பிண்டிப்
பொழில்வாய்த் தடவரை வாயல்ல தில்லையிப் பூந்தழையே (௫)

95. நாணுரைத்துமறுத்தல

வாணுதற பேதையை
நாணுதல உரைத்தது.

உறுங்கண்ணி வநத கணையுர வோன்பொடி யாயொடுங்கத
தெறுஙகண்ணி வநதசிற றடபல வன்மலைச சிற்றிலினவாய்
நறுஙகணணி சூடடினும நாணுமென வாணுதல நாகதெொணபூங
குறுங்கண்ணி வேய்நதிள மநதிகள் நாணுமிக் குன்றிடத்தே. (கூ)

96. இசையாமைகூறிமறுத்தல்

வசைதீர் குலத்திற்
கிசையா தென்றது.

நறமனை வேஙகையின் பூபபயில பாறையை நாகநண்ணி
மறமனை வேஙகை யெனநனி யஞ்சுமஞ சாரசிலமபா
குறமனை வேஙகைச சுணஙகொ டணஙகலர் கூட்டுபவோ
நிறமனை வேங்கை யதளம பலவன நெடுவரையே. (எ)

97. சேவ்வியிலளேன்றுமறுத்தல்

நவ்வி நோககி
சேவ்வியிலள் என்றது

கற்றில கண்டன்ன மென்னடை கண்மலா நோககருளப்
பெற்றில மென்பிணை பேச்சுப பெருகிள்ளை பிளளையின்றுன்
றுற்றிலள உற்ற தறிநதிலள ஆகத தொளிமிளிரும்
புற்றில வாளர வன்புலி யூரன்ன பூங்கொடியே (அ)

98. காபபுடைத்தேனறுமறுததல

காபபுடைத் தென்று
சேட்படுத்தது

முனிதரும அன்னையும என்னையா சாலவும் மூர்க்கரின்னே
தனிதரும இநநிலத தன்றைய குன்றமுந தாழ்சடைமேல்
பனிதரு திஙக ளணியம பலவா பகைசெகுக்குங
குனிதரு திண்சிலைக கோடுசென் றுன்சுடர்க கொற்றவனே. (கூ)

99. நீயேகூறென்றுமறுத்தல

அஞ்சுதும்பெரும புஞ்சின்மேலலடியைக
கூறுவநீயே கூறுகேனறது

அநதியின வாயெழி லமபலத தெமபரன அமபொன்வெற்பில்
பநதியின் வாய்பபல வின்சுனை பைநதே னெடுஙகடுவன
மந்தியின் வாய்கொடுத தோம்புஞ சிலமப மனஙகனிய
முந்தியின் வாய்மொழி நீயே மொழிசென்றம் மொய்குழற்கே.

100. குலமுறைகூறிமறுத்தல

தொழகுலத்தீர் சோறகாகேம்
இழ்குலத்தேம் எனவுரைத்தது

தெங்கம பழஙகமு கின்குலை சாடிக் கதலிசெற்றுக்
கொங்கம பழனத தொளிர்குளிர நாடினை நீயுமைகூா
பஙகம பலவன் பரஙகுன்றிற குனறன்ன மாபதைப்பச
சிங்கந திரிதரு சீறூரச சிறுமியெந தேமொழியே (கக)

101. நகையாடிமறுத்தல

வாட்டமையெதிராது சேட்படுத்தற்கு
மேனனகைத்தோழி இனனகைசெய்தது.

சிலையொனறு வாணுதல பஙகன்சிற் றமபல வன்கயிலை
மலையொன்று மாமுகத தெமமையர் எய்கணை மண்குளிக்கும
கலையொனறு வெஙகணை யோடு கடுகிட்ட தென்னிறகெட்டேன்
கொலையொனறு திண்ணிய வாறையர் கையிற கொடுஞ்சிலையே.(கஉ)

102. இரக்கத்தோடுமறுத்தல்

கையுறையெதிராது காதறதோழி
ஐயநீபெரி தயர்த்தனையென்றது.

மைத்தழை யாநின்ற மாமிடற் றமபல வன்கழற்கே
மெயத்தழை யாநின்ற அன்பினர் போல விதிர்விதிர்த்துக்
கைததழை யேந்திக கடமா வினுய்க்கையில வில்லின்றியே
பித்தழை யாநிற்ப ராலென்ன பாவம் பெரியவரே. (கங)

103. சிறப்பின்மைகூறிமறுத்தல்

மாந்தளிரும் மலர்நீலமும்
ஏந்தலிம்மலை யில்லையென்றது.

அக்கும் அரவும் அணிமணிக் கூத்தன்சிற் றம்பலமே
ஒக்கும் மிவள தொளிருரு அனுசிமனு சாசிலமபா
கொக்கும் சுனையும் குளிர்தளி ருங்கொழுமம போதுகளும
இக்குன்றில என்றும் மலாநதறி யாத இயல்பினவே (கச)

104. இளமைகூறிமறுததல்

முளையெயிற் றரிவை
விளைவிலள் எனறது.

உருகு தலைசசென்ற வுள்ளததும அமபலத தும்மொளியே
பெருகு தலைசசென்று நின்றேன பெருநதுறைப் பிளளைகள்ளா
முருகு தலைசசென்ற கூழை முடியா முலைபொடியா
ஒருகு தலைசசின் மழலைகசென் னைவைய ஒதுவதே. (கரு)

105. மறைத்தமைகூறிநகைத்துரைத்தல

என்வணமறைததபின் எண்ணியதரிதேன
நன்னுதறறேழி நகைசெய்தது.

பண்டா லியினும் இலைவளர் பாலகன் பாாகிழித்துத்
தொண்டா லியலுஞ் சுடாககழ லோனதொல்லைத தில்லையினவாய
வண்டா லியலும் வளர்பூந துறைவ மறைக்கினென்னைக்
கண்டா லியலுங் கடனில்லை கொல்லோ கருதியதே. (கசு)

106. நகைகணடுமகிழதல்

இன்னகைத்தோழி மென்னகைகண்டு
வண்ணககதிர்வேல் அணணலுரைத்தது.

பத்தகளு சேர்தளி நோககினன் வாக்கிற தாறமுதே
ஒத்தகளு சேர்ந்தென்னை யுயயநின் றேனறில்லை யொததிலங்கு
முத்தகஞ் சேர்மென் னகைபெருந் தோளி முகமதியின்
விததகளு சேர்மெல்லெ னகைகமன் றேவென விழுததுணையே. (கஎ)

107. அறியாளபோனறுநினைவுகேட்டல்

வேந்தன்சொன்ன மாந்தளிர்மேனியை
வெறியார்கோதை அறியேனென்றது.

விண்ணிறந் தார்நிலம் விண்டவர் என்றுமிக் காரிருவர்
கண்ணிறந தாரதில்லை யம்பலத் தாரகழுக குன்றினின்று
தண்ணறுந் தாதிவா சநதனச சோலைபபந தாடுகின்றார்
எண்ணிறந தாரவா யாரகண்ண தோமன்ன நின்னருளே (கஅ)

108. அவயவங்கூறல்

அவயவம் அவளுக்
கிவையிவை யென்றது.

குவவின கொஙகை குருமபை குழலகொன்றை கொவவைசெவவாய
கவவின வாணகை வெண்முததம கண்மலர் செங்கழுநீர்
தவவினை தீாபபவன் தாழ்பொழிற் சிற்றம பலமனையாட்
குவவின நாண்மதி போன்றொளிா கின்ற தொளிமுகமே.(ககூ)

109. கணணயந்துரைத்தல

கணணிவண பிறழ்வன
வண்ணம் உரைத்தது.

ஈசற்கி யான்வைதத அன்பின் அகன்றவன் வாங்கியவென்
பாசததிற் காரென றவன்றில்லை யின்னொளிா போனறவனரேள்
பூசத திருநீ றெனவெளுத தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த் தையிற்பெரு நீளம பெருங்கண்களே.(உ0)

110. தழையெதிர்தல்

அகனறவிடத் தாற்றாமைகண்டு
கவன்றதோழி கையுறையெதிர்நதது.

தோலாக கரிவெனற தறகுமு தவள்விற்கும் இலவின்றென்மைக்
கேலாப பரிசுள வேயன்றி யேலேம இருஞ்சிலமப
மாலாாக கரிய மலாக்கழ லமபல வன்மலையில்
கோலாப பிரசமன் னட்கைய நீதநத கொயதழையே (உக)

111. குறிப்பறிதல்

தழையேதிரா தோழிவதறகோர்
சொல்லறியேனெனப பலவளகக்குரைத்தது.

கழைகாண டலுஞ்சுளி யுங்களி யானையன ஞன்கரததில்
தழைகாண் டலுமபொய தழைப்பமுன காணபனின றமபலததான
உழைகாண் டலுங்னைப் பாகுமென ஞாககிமன ஞககங்கணடால்
இழைகாண் பணைமுலை யாயறி யேன்சொலலுமா றடவறகே (உஉ)

112. குறிப்பறிந்துகூறல

ஏழைக் கிருந்தழை
தோழிகோண டுரைத்தது.

தவளத்த நீறணி யுநதடங தோளண்ணல் தன்னொருபால்
அவளத்த ஞமக ஞுந்திலலை யானன ஞரித்ததன்ன
கவளதத யானை கடிநதார கரத்தகண் ஞர்தழையும்
துவளத் தகுவன வோசுரும பார்குழல் தூமொழியே. (உங)

113. வகுத்துரைத்தல

கடித்தழைகோணர்ந்த காதற்ரேழி
மடக்கோடிமாதர்க்கு வகுத்துரைததது.

ஏறும் பழித்தழை யேற்பின்மற் றேலா விடினமடன்மா
ஏறும அவனிட பங்கொடி யேற்றிவந தம்பலத்துள்
ஏறும அரன்மன்னும் ஈங்கோய் மலைநம இருமபுனங்காய்ந்
தேறும் மலைதொலைத் தாறகெனனை யாஞுசெய்வ தேந்திழையே (உச)

114. தழையேற்பித்தல்

கருங்குழனமடந்தைக கரும்பெறறேழி
இருந்தழைகோளகென விரும்பிககொடுத்தது.

தெவவரை மெயயெரி காய்சிலை யாணடெனனை யாண்டுகொணட
செவ்வரை மேனியன் சிற்றம பலவன் செழுங்கயிலை
அவ்வரை மேலன்றி யில்லைகண் டாயுள்ள வாறருளான்
இவவரை மேறசிலம பன்னொளி திற்றநத ஈர்ந்தழையே (உரு)

115. தழைவிருப்புரைத்தல்

விருப்பவள் தோழி
பொருப்பற் குரைத்தது.

பாசத் தளையறுத் தாண்டுகொண் டோன்றில்லை யம்பலஞ்சூழ்
தேசத் தனசெம்மல் நீத்தந் தனசென்றி யான்கொடுத்தேன்
பேசிற் பெருகுஞ் சுருங்கு மருங்குல் பெயர்ந்தரைத்துப்
பூசிற் றிலளன்றிச் செய்யா தனவில்லை பூந்தழையே. (உசு)

கரு. பகற்குறி

116. குறியிடங்கூறல்

வாடிடத் தண்ணல் வண்டழையெதிர்ந்தவள்
ஆடிடத் தின்னியல் பறியவுரைத்தது.

வானுழை வாளம் பலத்தரன் குன்றென்று வட்கிவெய்யோன்
தானுழை யாவிரு ளாய்ப்புறம் நாப்பண்வண் டாரகைபோல்
தேனுழை நாக மலர்ந்து திகழ்பளிங் கான்மதியோன்
கானுழை வாழ்வுபெற் றாங்கெழில் காட்டுமொர் காப்பொழிலே. (க)

117. ஆடிடம்படர்தல்

வண்டழையெதிர்ந்த ஒண்டொடிப்பாங்கி
நீடமைத்தோளியோ டாடிடம்படர்ந்தது.

புயல்வளர் ஊசன்முன் னாடிப்பொன் னேபின்னைப் போய்ப்பொலியும்
அயல்வளர் குன்றினின் றேற்றும் அருவி திருவுருவின்
கயல்வளர் வாட்கண்ணி போதரு காதரந் தீர்த்தருளும்
தயல்வளர் மேனியன் அம்பலத் தான்வரைத் தண்புனத்தே.

118. குறியிடத்துக்கொண்டுசேறல்

அணிவளராடிடத் தாயவெள்ளம்
மணிவளர்கொங்கையை மருங்ககன்றது.

தினைவளங் காத்துச் சிலம்பெதிர் கூஉய்ச்சிற் றின்முற்றிழைத்துச்
சுனைவளம் பாய்ந்து துணைமலர் கொய்து தொழுதெழுவார்
வினைவளம் நீறெழ நீறணி யம்பல வன்றன்வெற்பில்
புனைவளர் கொம்பரன் னாயன்ன காண்டும் புனமயிலே. (உ)

119. இடத்துய்த்துநீங்கல

மடத்தகைமாதரை யிடத்தகத்துய்த்து
நீங்கலுற்ற பாங்கிபகர்ந்தது.

*நரல்வே யினநின தோட்குடைந் துக்கநன் முத்தஞ்சிந்திப்
பரல்வே யறையுறைக் குறவர்க சடிபபரன றில்லையன்னாய்
வரல்வேய் தருவனிங கேநிலுங் கேசென்றுன் வார்குழற்கேற்ப
குரல்வே யளிமுரல் கொங்கார் தடமலர் கொண்டுவந்தே. (சு)*

120. உவந்துரைத்தல்

களிமயிறசாயலை ஒருசிறைக்கண்ட
ஒளிமலர்த்தாரோன் உவந்துரைத்தது.

*படமா சுணபபள்ளி யிக்குவ டாககியப் பஙகயக்கண்
நெடுமா லெனவென்னை நீநினை ந தோநெஞ்சத தாமரையே
இடமா இருக்கலுற் றேதில்லை நின்றவன் ஈாங்கயிலை
வடமார் முலைமட வாய்வநது வைகிற்றிவ் வாரபொழிற்கே. ()*

121. மருங்கணைதல்

வாணுதலரிவை நாணுதல்கண்ட
கோதைவேலவன் ஆதரவுரைத்தது.

*தொாத்தீன் மலர்ப்பொழிற் றிலலைதொல் லோனருளன்னமுனனி
முதநீன் குவளைமென் காநதளின் மூடித்தன் ஏரளப்பாள்
ஒதநீங கொடியி னொதுஙகுகின றுளமருங குல்நெருஙகப்
பிதநீர் பணைமுலை காளென்னுக கின்னும் பெருக்கின்றதே. ()*

122 பாங்கியறிவுரைத்தல்

நெறிகுழற் பாங்கி
அறிவறி வித்தது.

*அளிநீ டளகத்தின் அட்டிய தாதும் அணியணியும்
ஒளிநீள் சுரிகுழற் சூழ்ந்தவொண் மாலையும தண்ணறவுண்
களிநீ யெனசசெய்த வன்கடற் றில்லையன் னுய்கலங்கல்
தெளிநீ யனையபொன் னேபன்னு கோலம் திருநுதலே. (எ)*

123. உண்மகிழ்ந்துரைத்தல்

தண்மலர்க் கோதையை
உண்மகிழ்ந் துரைத்தது.

செழுநீர் மதிக்கண்ணிச் சிற்றம் பலவன் திருக்கழலே
கெழுநீர்மை யிற்சென் றுகிண்கிணி வாய்க்கொள்ளுங் கள்ளகத்த
கழுநீர் மலரிவள் யானதன் கண்மரு விப்பிரியாக்
கொழுநீர் நறப்பரு கும்பெரு நீர்மை யளிகுலமே (அ)

124. ஆயத்துய்த்தல்

கணைகடலன்ன கார்மயிற்கணத்துப்
புணைமடமானைப் புகவிட்டது.

கொழுந்தா ரகைமுகை கொண்டலம் பாசடை விண்மடுவில்
எழுந்தார் மதிக்கம லம்மெழில் தந்தென இப்பிறப்பில்
அழுந்தா வகையெனை யாண்டவன் சிற்றம் பலமனையாய்
செழுந்தா தவிழ்பொழில் ஆயத்துச் சேர்க திருத்தகவே (௯)

125. தோழிவந்துகூடல்

நெறியுறுகுழலியை நின்றிடத்துய்த்துப்
பிறைநுதற்பாங்கி பெயர்ந்தவட்குரைத்தது.

பொன்னனை யான்தில்லைப் பொங்கர வம்புன் சடைமிடைந்த
மின்னனை யானருள் மேவலர் போன்மெல் விரல்வருந்த
மென்னனை யாய்மறி யேபறி யேல்வெறி யாமலர்கள்
இன்னன யான்கொணர்ந் தேன்மணந் தாழ்குழற் கேய்வனவே (௧௦)

126. ஆடிடம்புகுதல்

தனிவிளையாடிய தாழ்குழற்றேமொழி
பனிமதிநுதலியோ டாடிடம்படர்ந்தது.

அறுகால் நிறைமலர் ஐம்பால் நிறையணிந் தேனணியார்
துறுகான் மலர்த்தொத்துத் தோகைதொல் லாயமெல் லப்புகுக
சிறுகால் மருங்குல் வருந்தா வகைமிக என்சிரத்தின்
உறுகால் பிறர்க்கரி யோன்புலி யூரன்ன ஒண்ணுதலே. (௧௧)

127. தனிகண்டுரைத்தல்

வேயொத்ததோளியை ஆயத்துய்த்துக
குனிசிலையண்ணலைத் தனிகண்டுரைத்தது.

தழங்கும் அருவியெஞ் சீறூர் பெரும இதுமதுவும்
கிழங்கும் அருந்தி யிருந்தெமமொ டின்று கிளர்ந்துகுன்றர்
முழங்குங் குரவை யிரவிற்கண் டேகுக முத்தன்முத்தி
வழங்கும் பிரானெரி யாடிதென் றில்லை மணிநகர்க்கே. (கஉ)

128. பருவங்கூறிவரவுவிலக்கல்

மாந்தளிர்மேனியை வரைந்தெய்தா
தேந்தலிவ்வா றியங்கலென்றது.

தள்ளி மணிசந்த முந்தித் தறுகட் கரிமருப்ப
தெள்ளி நறவம் திசைதிசை பாயும் மலைச்சிலம்ப
வெள்ளி மலையன்ன மால்விடை யோன்புலி யூர்மருங்கு
வள்ளி மருங்குல் வருந்துவ போன்ற வனமுலையே. (கங)

129. வரைவுடம்படாதுமிகுத்துக்கூறல

வரைவுகடாய வாணுதற்றோழிக்கு
விரைமலர்த்தாரோன் மிகுத்துரைத்தது.

பாடுஞ்செய் பொன்னனைக் குந்திக ரில்லையிம் மாதர்க்கென்னப்
பீடுஞ்செய் தாமரை யோன்பெற்ற பிள்ளையை உள்ளலரைக்
கோடுஞ்செய் தென்பிறப் புக்கெடத் தில்லைநின் றோன்கயிலைக்
கூடுஞ்செய் சாரற் கொடிச்சியென் றோநின்று கூறுவதே. (கச)

130. உண்மைகூறிவரைவுகடாதல

கல்வரைநாடன் இல்லதுரைப்ப
ஆங்கவளுண்மை பாங்கிபகர்ந்தது.

வேய்தந்த வெண்முத்தம் சிந்துபைங் கார்வரை மீன்பரப்பிச்
சேய்தந்த வானகம் மானுஞ் சிலம்பதன் சேவடிக்கே
ஆய்தந்த அன்புதந் தாட்கொண்ட அம்பல வன்மலையில்
தாய்தந்தை கானவ ரேனலெங் காவலித் தாழ்வரையே. (கரு)

131. வருத்தங்கூறிவரைவுகடாதல்

கனங்குழைமுகத்தவள் மனங்குழைவுணர்த்தி
நிரைவளைத்தோளி வரைவுகடாயது.

*மன்னுந திருவருந தும்வரை யாவிடின் நீர்வரைவென்
றுன்னு மதற்குத் தளாந்தொளி வாடிநிர் உமபரெலாம
பன்னும புகழ்ப்பர மன்பரஞ் சோதிசிற் றம்பலத்தான்
பொன்னங கழலவழுத் தார்புல னென்னப புலமபுவனே.(கசு)*

132. தாயச்சங்கூறிவரைவுகடாதல்

மடத்தகைமாதர்க் கடுபபனவறியா
வேறகட்பாங்கி யேறகவுரைத்தது.

*பனித்துண்டஞ் சூடும் படர்சடை யம்பல வன்னுலகம்
தனிததுண் டவன்றொழுந தாளோன கயிலைப பயில்சிலமபா
கனித்தொண்டை வாய்சசி கதிர்முலைப் பாரிப்புக் கண்டழிவுற்
றினிக்கண் டிலமபற் றுச சிற்றிடைக் கெனறஞ்சும் எமமனையே()*

133. இற்செறிவறிவித்துவரைவுகடாதல

விற்செறி நுதலியை
இறசெறி வுரைத்தது.

*ஈவிளை யாட நறவிளை வோர்ந்தமர் மால்பியற்றும
வேய்விளை யாடும்வெற் பாவுற்று நோக்கியெம் மெல்லியலைப்
போய்விளை யாடலென் றன்னை அம்பலத தானபுரத்தில
தீவிளை யாடநின் றேவிளை யாடி திருமலைக்கே. (கஅ)*

134. தமர்நினைவுரைத்துவரைவுகடாதல்

விற்செறிநுதலியை இறசெறிவிபபரேன்
றெளிவேலவறகு வெளியேயுரைத்தது..

*சுற்றுஞ் சடைக்கற்றை சிற்றம பலவற் றொழாதுதொல்சீர்
கற்றும் அறியல ரிற்சிலம் பாவிடை நைவதுகண்
டெற்றுந் திரையின் னமிர்தை யினித்தமர் இற்செறிப்பார்
மற்றுஞ் சிலபல சீறூர் பகர்பெரு வார்த்தைகளே. (ககூ)*

135. எதிர்கோள்கூறிவரைவுகடாதல்

ஏந்திழைத்தோழி ஏந்தலமுன்னிக்
கடியாமாறு நொடிகேன்றது

வழியும் அதுவன்னை யென்னின் மகிழும்வந் தெந்தையுநின்
மொழியின் வழிநிற்கும் சுற்றமுன் னேவயம் அம்பலத்துக்
குழியும்ப ரேத்துமெங் கூத்தன்குற் றாலமுற் றும்மறியக்
கெழியும்ம வேபணைத் தோள்பல என்னோ கிளக்கின்றதே. ()

136. ஏறுகோளகூறிவரைவுகடாதல்

எனவணயர் துணி
வின்ன தேன்றது

படையார் கருங்கண்ணி வண்ணப் பயோதரப் பாரமுநுண்
இடையார் மெலிவுங்கண் டண்டர்கள் ஈர்முல்லை வேலியெம்மூர்
விடையார் மருப்புத் திருத்திவிட் டாரிவ ளென்புலியூர்
உடையார் கடவி வருவது போலும் உருவினதே. (உக)

137. அயலுரையுரைத்துவரைவுகடாதல்

கயல்புரை கண்ணியை
அயலுரை யுரைத்தது.

உருப்பனை யன்னகைக் குன்றொன் றுரித்துர வூரெரித்த
நெருப்பனை அம்பலத் தாதியை உம்பரச்சென் றேத்திநிற்குந்
திருப்பனை யூரனை யாளைப்பொன் னாளைப் புனைதல்செப்பிப்
பொருப்பனை முன்னின்றென னோவினை யேன்யான் புகல்வதுவே. ()

138. தினைமுதிர்வுரைத்துவரைவுகடாதல்

ஏனல்விளையாட் டினியில்லையென
மானமறதோழி மடந்தைக்குரைத்தது.

மாதிடங் கொண்டம் பலத்துநின் றோன்வட வான்கயிலைப்
போதிடங் கொண்டபொன் வேங்கை தினைப்புனங் கொய்கவென்று
தாதிடங் கொண்டுபொன் வீசுதன் கள்வாய் சொரியநின்று
சோதிடங் கொண்டிதெம் மைக்கெடு வித்தது தூமொழியே. ()

139. பகல்வரல்விலக்கிவரைவுகடாதல்

அகல்வரை நாடனைப்
பகல்வரல் என்றது.

வடிவார் வயற்றில்லை யோன்மல யத்துநின் றும்வருதேன்
கடிவார் களிவண்டு நின்றலர் தூற்றப் பெருந்தகைநீயார்
நொடிவார் நமக்கினி நோதக யானுமக் கென்னுரைக்கேன்
தடிவார் தினையெமர் காவேம் பெருமவித் தண்புனமே (உச)

140. தினையோடுவெறுத்துவரைவுகடாதல்

தண்புனத்தோடு தளர்வுற்றுப்
பண்புனைமொழிப் பாங்கிபகர்ந்தது.

நினைவித்துத் தன்னையென் னெஞ்சத் திருந்தம் பலத்துநின்று
புனைவித்த ஈசன் பொதியின் மலைப்பொருப் பன்விருப்பின்
தினைவித்திக் காத்துச் சிறந்துநின் றேமுக்குச் சென்றுசென்று
வினைவித்திக் காத்து விளைவுண்ட தாகி விளைந்ததுவே (உரு)

141. வேங்கையோடுவெறுத்துவரைவுகடாதல்

நீங்குகவினி நெடுந்தகையென
வேங்கைமேல்வைத்து விளம்பியது.

கனைகடற் செய்தநஞ் சுண்டுகண் டார்க்கம் பலத்தமிழ்தாய்
வினைகெடச் செய்தவன் விண்டோய் கயிலை மயிலனையாய்
நனைகெடச் செய்தன மாயின் நமைக்கெடச் செய்திடுவான்
தினைகெடச் செய்திடு மாறுமுண் டோவித் திருக்கணியே ()

142. இரக்கமுற்றுவரைவுகடாதல்

செழுமலை நாடற்குக்
கழுமலுற் றிரங்கியது.

வழுவா இயலெம் மலையர் விதைப்பமற் றியாமவளர்த்த
கொழுவார் தினையின் குழாங்களெல் லாமெங் குழாம்வணங்குஞ்
செழுவார் கழற்றில்லைச் சிற்றம் பலவரைச் சென்றுநின்று
தொழுவார் வினைநிற்கி லேநிற்ப தாவதித் தொல்புனத்தே. ()

143. கொய்தமைகூறிவரைவுகடாதல்

நீடிரும்புனத்தினி யாடேமென்று
வரைவுதோன்ற வுரைசெய்தது

பொருப்பர்க்கி யாமொன்று மாட்டேம் புகலப் புகலெமக்காம்
விருப்பர்க் கியாவர்கட்கும் மேலாகு மேல்வரும் ஊரெரித்த
நெருப்பர்க்கு நீடம் பலவருக் கன்பர் குலநிலத்துக்
கருப்பற்று விட்டெனக் கொய்தற்ற தின்றிக் கடிப்புனமே. ()

144. பிரிவருமைகூறிவரைவுகடாதல

மறைப்புறக் கிளவியிற்
சிறைப்புறத் துரைத்தது.

பரிவுசெய் தாண்டம் பலத்துப் பயில்வோன் பரங்குன்றின்வாய்
அருவிசெய் தாழ்புனத் தைவனங் கொய்யவும் இவ்வனத்தே
பிரிவுசெய் தாலரி தேகொள்க பேயர்டும் என்னும்பெற்றி
இருவிசெய் தாளின் இருந்தின்று காட்டும் இளங்கிளியே.(உகூ)

145. மயிலொடுகூறிவரைவுகடாதல

நீங்கரும்புனம்விடு நீள்பெருந்துயரம்
பாங்கிபகர்ந்து பருவரலுற்றது

கணியார் கருத்தின்று முற்றிற் றியாஞ்சென்றும் கார்ப்புனமே
மணியார் பொழில்காள் மறத்திர்கண் டீர்மன்னும் அம்பலத்தோன்
அணியார் கயிலை மயில்காள் அயில்வேல் ஒருவர்வந்தால்
துணியா தனதுணிந் தாரென்னும் நீர்மைகள் சொல்லுமினே.()

146. வறும்புனங்கண்டுவருந்தல

மென்புனம்விடுத்து மெல்லியல்செலல
மின்போலிவேலோன் மெலிவுற்றது.

பொதுவினிற் றீர்த்தென்னை யாண்டோன் புலியூ ரரன்பொருப்பே
இதுவெனில் என்னின் றிருக்கின்ற வாறெம் இரும்பொழிலே
எதுநுமக் கெய்திய தென்னுற் றனிரறை யீண்டருவி
மதுவினிற் கைப்புவைத் தாலொத்த வாமற்றிவ் வான்புனமே.()

147. பதிநோக்கிவருந்தல்

மதிநுதலரிவை பதிபுகலரிதென
மதிநனிகலங்கிப பதிமிகவாடியது.

ஆனந்த மாக்கடல் ஆடுசிற் றம்பலம அன்னபொன்னின்
தேனுந்து மாமலைச சீறா ரிதுசெய்ய லாவதில்லை
வானுந்து மாமதி வேண்டி யழுமழப் போலுமன்றே
நானுந் தளர்ந்தனன் நீயுந் தளாநதனை நன்னெஞசமே. (௩௨)

கச. இரவுக்குறி :

148. இரவுக்குறிவேண்டல

நள்ளிருட்குறியை வள்ளணிவணங்கு
வீங்குமென்முலைப் பாங்கிக்குரைத்தது

